

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (7.7.2025) தலைமைச் செயலகத்தில், மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர்கள் பொன். ராஜேந்திர பிரசாத், பிரவீன் டாட்டியா மற்றும் ரமீத் குமார் ஆகியோர் சந்தித்து, தமிழ்நாட்டைச் சேர்ந்த புத்த, சமண மற்றும் சீக்கிய சமூகத்தினர் இந்தியாவிலுள்ள தொன்மையான தங்களது புனிதத் தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்திட அரசு நிதியுதவி வழங்கி ஆணை பிறப்பித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (7.7.2025) முகாம் அலுவலகத்தில், மாநிலங்களவை உறுப்பினர் என்.ஆர். இளங்கோ குடும்பத்தினருடன் சந்தித்து தனது மகள் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.





